**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 86** **நாள்: 19.07.2017**

## பொதுசுகாதார கல்வித்துறை சார்பாக ஒரு இலட்சம் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு டெங்கு காய்ச்சல் தடுப்பு குறித்த தீவிர விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதார கல்வித்துறை சார்பாக சென்னை பெருநகரம் முழுவதும் பல்வேறு நோய்த்தடுப்பு மற்றும் தூய்மை இந்திய திட்டம் சார்பாக விழிப்புணர்வு முகாம் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் மழைக்காலம் தொடங்கி உள்ளதால், கொசு ஒழிப்பு பணியை தீவிரப்படுத்தவும், டெங்கு காய்ச்சல் சம்பந்தமான விழிப்புணர்வு முகாம்களை கல்வி நிறுவனங்களில் தொடர்ந்து நடத்தவும் பொது சுகாதாரத்துறைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதன்பேரில், இன்று (19.07.2017) பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 200 கோட்டங்களில், கோட்டத்திற்கு ஒரு பள்ளி வீதம், மொத்தம் 200 பள்ளிகளில் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு முகாம்கள் நடைபெற்றது. சிறப்பு நிகழ்வாக, தியாகராய நகரில் உள்ள ஆர்.கே.எம். சாரதா வித்யாலயா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நோய்த் தடுப்பு விழிப்புணர்வு முகாம், அரசு சாரா அமைப்பான எக்ஸ்நோராவின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது. இங்கு சுமார் 1585 மாணவிகள் கலந்து கொண்டனர்.

இம்முகாமில் மாணவியர்களிடம் டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் கொசு எவ்வாறு உருவாகிறது, அவை உருவாகாமல் தடுக்கும் முறைகள் குறித்தும், டெங்கு காய்ச்சல் பரப்ப காரணமாக இருக்கும் ஏடிஸ் வகை கொசுவின் வாழ்க்கை சுழற்சி, உருவாகும் விதம், பரப்பும் நோய்கள் மற்றும் அதன் அறிகுறிகள் குறித்தும், வீட்டிலும், அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள டயர், தேங்காய் சிரட்டைகள், உடைந்த குடங்கள், உபயோகமற்ற பிளாஸ்டிக் பொருட்கள் முதலியவற்றில் தண்ணீர் தேங்கி கொசுப்புழு உருவாகும் வாய்ப்புள்ளதால், அதனை உடன் அகற்றிடுமாறும், தண்ணீர் சேகரிக்கும் தொட்டி, திறந்த கிணறு, கழிவுநீர் தொட்டி, திறந்த மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை முறைப்படி மூடி வைக்க வேண்டும் எனவும், தண்ணீர் நிரப்பிய பூச்சாடி மற்றும் கீழ்த்தட்டு, சுவர் மேல் பதிக்கப்பட்ட கண்ணாடி துண்டுகள், செல்லப் பிராணிக்கு வைக்கப்படும், பாத்திரம், குளிர்பதனப் பெட்டியின் கீழ்த்தட்டு, தார்ப்பாய் உறை போட்ட வாகனங்கள், காற்று குளிர்விப்பி (AC), மணி பிளான்ட் போன்றவற்றை வாரமிருமுறை சுத்தப்படுத்த வேண்டும் என்பது குறித்தும், உபயோகமற்ற டயர், தேவையற்ற உடைந்த பொம்மைகள், தகர குவளை, பெரிய துணைக் கருவிகள், பழைய காலணிகள், உபயோகமற்ற மற்றும் உடைந்த பாட்டில்கள், பிளாஸ்டிக் குப்பைகள், தேங்காய் ஓடுகள் போன்றவற்றை அகற்ற வேண்டும் என்பது குறித்தும், எவ்வகை காய்ச்சல் ஏற்பட்டாலும், உடன்

மாநகராட்சி அல்லது அரசு மருத்துவமனையை அணுகி சிகிச்சை பெறுமாறும், மருத்துவர் பரிந்துரைத்த மருந்துச் சீட்டு இல்லாமல் நேரடியாக எந்த மாத்திரையும் உபயோகப்படுத்த வேண்டாம் என்றும், பார்வைக்காக கொசுப்புழுக்களும் காண்பிக்கப்பட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும்,  மாணவிகள் அனைவரும் சுகாதார தூதர்களாக அறிவிக்கப்பட்டு, சுகாதார தூதர் அட்டைகள் வழங்கப்பட்டது.  பின்னர், மாணவிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அனைத்து மாணவிகளும் டெங்கு காய்ச்சல் தடுப்பு உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

இன்று சென்னை முழுவதும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான பள்ளி மாணவ, மாணவியர்கள் டெங்கு நோய்த்தடுப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.  மற்ற பள்ளிகளிலும் இந்த விழிப்புணர்வு முகாம் தொடர்ந்து நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர்.டி.ஜி.சீனிவாசன், பள்ளி தலைமையாசிரியை திருமதி.சாந்தி, மண்டல சுகாதார அலுவலர், எக்ஸ்நோரா நிர்வாகிகள், ஆசிரிய பெருமக்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**